எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்

அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட

அஜந்தா
வீடியோ
63 சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 05 திங்கட்கிழமை (21 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 362

போராட்டத்துக்கு எதிரான கருத்து போரை முறியடிக்க நாம் ஏந்திய உண்மை ஆயுதம்

'புலிகளின்குரல்' நான்காவதாண்டு நிறைவையொட்டி தலைவர் செய்தி

பிரபாகரன்

யாழ்ப்பாணம், நவ. 21

பொய்மையையே பிரதான ஆயுதமாகக் கொண்டு, எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட கருத்துப் போரை முறியடிக்க, நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். அந்த உண்மையின் குரலாகவே ''புலிகளின் குரல்'' ஒலித்துக் கொண்டிருக்கிறது.

—''புலிகளின் குரல்'' வானோசையின் நான்காவது ஆண்டு நிறைவை ஒட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

எமது விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வ வானோசையான 'புலிகளின் குரல்' இன்றுடன் தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம் கட்ட தமிழீழப் போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானோசை, யுத்த சூழலால் எழுந்த நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் ஈடுகொடுத்து, பிரமாதமான முறையில் பெரு வளர்ச்சி கண்டிருக்கிறது. விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்த சாதனை பாராட்டுக்குரியது.

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டுவருகின்றன. நீண்ட காலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரசார யுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களைத் திரித்து, விசமத்தனமான பிரசாரத்தை செய்துவருகின்றன. மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பிச் திசை திருப்பி, போராட்டத்தை நசுக்கி

(2ஆம் பக்கம் பார்க்க)

* * *

அன்ரன் பாலசிங்கம் தகவல்:

சிறப்புச் செய்தி

போர் நிறுத்தத்தை ஓரிரு வாரங்கள் நீடிக்ககோரி தலைவர் பிரபாகரனுக்கு அனுருத்த கடிதம்!

தலை கொய்தமை குறித்து விசாரித்து பதில் தந்தால் புலிகள் பரிசீலிப்பர்

ஸ்ரீலங்கா அரசுக்கு உடனடியாகத் தெரிவிப்பு

— உதயன் செய்தியாளர்:- ஜி. குகநாதன் —

யாழ்ப்பாணம், நவம்பர் 21

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருவார கால போர் நிறுத்தத்தை மேலும் ஓரிரு வாரங்களுக்கு நீடிக்கக் கோரி ஸ்ரீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரனுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தால் அரசும் பதிலுக்கு யுத்த நிறுத்தம் செய்யத் தயார் என அமைச்சர் ரத்வத்தை அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதம் நேற்று கிடைத்த கையோடு தமது பதிலை தலைவர் பிரபாகரன் உடனடியாக (நேற்றே) கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு அனுப்பி வைத்தார்.

புலிகள் யுத்த நிறுத்தத்தை கைக்கொண்ட காலத்தில்—நெடுங்கேணிப் பகுதியில்— புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு.தலை துண்டித்து எடுத்து செல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்து, உண்மையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தால் அரசின் கோரிக்கை குறித்து பரிசிலிக்கத் தாம் தயார் என தலைவர் பிரபாகரன் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

''புலிகளின் குரல்'' வானொலியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் நேற்று உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இத்தகவல்களை வெளியிட்டார்.

இந்த விழா நேற்று மாலை நல்லூர் இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது.

நிதர்சனப் பொறுப்பாளர் திரு. நா. தமிழன்பன் தலைமையில் நடந்த விழாவில் தேசியத்தலைவரின் விசேட செய்தியை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் வாசித்தார்.

இவ்விழாவில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

திரு. கா. சண்முகலிங்கம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பிரமஸ்ரீ வீரமணி ஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

நான்காவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான — தேசியத் தலைவரின் கையொப்பத்துடனான — சான்றிதழ்களையும், கேடயங்களையும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்செல்வன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியதாவது:


அன்ரன் பாலசிங்கம்

இன்றைய அரசியல் சூழ்நிலை பெரும்பாலும் மக்களைக் குழப்பியிருக்கிறது. சந்திரிகா அம்மையார் பிரதமராக வந்த போது காட்டிய ஆர்வம் இப்போது இல்லை. இப்போது எல்லாம் தலைகீழாக — முரண்பாடாக — உள்ளன. எதை நம்புவது என்று குழப்பம். அரசியலே அபத்த நாடகமாக மாறியிருக்கிறது.

ஹெலிக்கொப்டர் ஆகாயத்தில் நின்று சுடும்போது எமது மக்கள் ஓடி ஒளிகிறார்கள். ஆனால் தரையில் இறங்கிய போது ஓடிப்போய் கட்டிப் பிடித்துக்கொஞ்சுகிறார்கள்.

திரு. பிரபாகரன் நேசக்கரம் நீட்டுகிறார்; ஆனால் சிங்களவர்கள் கழுத்தை வெட்டிக்கொண்டு போகிறார்கள்.

சந்திரிகா யாழ்ப்பாணம் வந்து திரு. பிரபாகரனைச் சந்திக்கப் போவதாகக் கூறினார்; ஆனால் இப்போது இந்தியாவுக்குப் போகப் போவதாகக் கூறுகிறார்.

இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான — அபத்தமான — முறையிலே [illegible]

(3ஆம் பக்கம் பார்க்க)

இன்று முதல் மாவீரர் வாரம்

யாழ்ப்பாணம், நவ. 21

தமிழீழத்தின் விடிவுக்காக தமது உயிரையே தற்கொடையாக வழங்கிய மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகின்றது.

இன்று காலை 9 மணிக்கு திணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள், தனியார் மற்றும் பொது நிறுவனங்கள், விடுதலைப் புலிகளின் பாசறைகள், அலுவலகங்கள் எங்கும் ஈகைச்சுடர் மற்றும் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவதுடன் மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தேசியக்கொடி ஏற்றப்படும் போது தேசியகீதம் இசைக்கப்படும். மாவீரர் உருவப் படங்களுக்கு மலரஞ்சலியும் செய்யப்படும்.

வட்ட ரீதியாக அமைக்கப் பட்ட மாவீரர் ஆலயங்களில் விசேட நிகழ்வுகள் இடம் பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரத்தை ஒட்டி பல்வேறு உணர்வுபூர்வ நிகழ்வுகள் இடம்பெறும்.

(உ-3)

சு.கவின் தலைமையும் சந்திரிகாவின் கைக்கு!

கொழும்பு, நவ. 21

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்கவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப்போது சுதந்திரக்கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவியாக திருமதி சிறிமாவே பண்டாரநாயக்கா இருந்து வருகின்றார்.

சந்திரிகா குமாரதுங்கா இந்த இரண்டு அமைப்புக்களினதும் துணைத் தலைவியாக தற்போது இருந்து வருகின்றார்.

(உ-எ)

தமிழீழ மீட்பு நிதி:

கடன் மீளளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 21

மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாவதை ஒட்டி தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு வைபவங்களும் இடம் பெறவிருக்கின்றன.

கடன் மீளளிப்புப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக நடைபெறும் வைபவங்களில் வைத்து கடனை மீளப் பெற்றுக் கொள்வர்.

நாளையும், நாளை மறுதினமும் கடன் மீளளிப்பு வைபவம் இடம் பெறும் இடங்களும் உரிய உதவி அரச அதிபர் பிரிவுகளும் வருமாறு :-

நாளை

★ நாளை காலை 9.00 மணி: நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில்—நல்லூர், யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை.

★ பிற்பகல் 2.00 மணி: சித்தன்கேணி வட்டு.இந்துக் கல்லூரியில் — மானிப்பாய்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுவாமி பிரேமானந்தா விளக்க மறியலில்!

திருச்சி நீதிவானின் உத்தரவில்

சென்னை, நவ. 21

திருச்சி மாவட்டத்தில் உள்ள பிரேமானந்தா ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் பிரேமானந்த ஸ்வாமியை 13 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கும்படி புதுக் கோட்டை மாவட்டம்—கீரனூர் குற்றவியல் நடுவர் மன்ற நீதிவான் திரு. முரளீதரன் நேற்று உத்தரவிட்டார். கற்பழிப்பு, சட்டத்துக்கு புறம்பாக பெண்களை அடைத்து வைத்திருத்தல் ஆகிய குற்றச் சாட்டுக்களைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுப் பொலீஸார் நேற்று முன்தினம் இவரைக் கைது செய்திருந்தனர்.

இலங்கையைச் சேர்ந்த பிரேமானந்த ஸ்வாமிகள் மாத்தளை சுவாமியார் என இங்கு அழைக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

(உ-எ)

வான் புலிகள் பிரிவு உதயம்! விமானம் ஓட்ட 20பேர் தயார்!!

"சண்டே ஐலண்ட்" தகவல்

கொழும்பு, நவ. 21

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இதுவரை இல்லாத ஒன்று அரசுப்படையின் விமானத்தாக்குதலை எதிர்கொள்ளும் திறன்மட்டுமே என இதுவரை கணக்கிடப்பட்டு வந்தது என்றும் —

ஆனால் இந்த இயலாமையை விடுதலைப் புலிகள் சரி செய்துவிடும் வலுவான நிலையை அடைந்துள்ளனர் என்றும் ''சண்டே ஐலண்ட்'' தெரிவித்துள்ளது.

Air Tigers — அதாவது வான் புலிகள் — என்று பெயரிடப் பட்ட [illegible] விடுதலைப் புலிகள் [illegible] படுத்துகின்றது என்றும் —

சுமார் இருபது விடுதலைப் புலிகள் போர் விமானங்களை ஓட்டும் பயிற்சியை மேற்கத்திய நாடுகளில் ஏற்கனவே பெற்றுவிட்டனர் என்றும் —

மேற்கத்திய நாடுகளில் இருந்தே எடை குறைந்த விமானங்களை விடுதலைப் புலிகள் வாங்கி வைத்துள்ளனர் அல்லது இவைகள் விடுதலைப் புலிகள் வசம் கிடைத்துவிடும் சூழ்நிலை [illegible] என்றும் ஸ்ரீலங்கா விமானப்படை அச்சம் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றிருப்பதால் அரசுப்படையின் போர் விமானங்களைக் கூட இனிக்கடத்திச் செல்லக் கூடும் என்றும் —

இந்த ஆண்டில் ஐந்து சிறிய விமானங்களை விடுதலைப் புலிகள் வாங்கிவிட்டனர் என்றும் ''சண்டே ஐலண்ட்'' ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டம் — கிளிநொச்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் விமானப் படைப் பயிற்சித்தளத்தை இலங்கை விமானங்கள் கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் குண்டு வீசி அழித்தன என்றும் —

விடுதலைப் புலிகள் வான் படைத்திறனைப் பெற்றுவிட்டால், அவர்கள் தற்கொலைப் படைத் தாக்குதலை நடத்தி அரசுப்படைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடும் என்றும் செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

— இவ்வாறு ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகையை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

(உ-எ)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

தரத்தில் உயர்ந்த இல்க்கி, பாமாஸ், காப்பிலி, பென்டம், கினிக்கோழி, வெள்ளடியன், வான்கோழி, தாரா, மணித்தாரா, போன்றவற்றின் அடை வைப்பதற்கான நல்லின முட்டைகளை உடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை, இராஜ வீதி, கோப்பாய்; தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

(சி-9703)

பதிவு செய்யுங்கள்

நல்லின பிறிமா புறொயிலர் குஞ்சுகளை பெற்றுக் கொள்வதற்கு இன்றே பதிவு செய்யுங்கள். தொடர்பு: மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணை, இராஜ வீதி, கோப்பாய். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். (சி-9704)

விற்பனையாகிறது

மெய்கண்டான் நாட்காட்டி (கலண்டர்) சிவம் அச்சிடும் கலண்டர் பெரிது சிறிது மற்றும் சகல விதமான கலண்டர், பொக்கட் கலண்டர்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கும் இடம்: ஸ்ரீலங்கா புத்தக சாலை, யாழ்ப்பாணம்.

(சி-9701)

விடைத்தாள் மதிப்பீடு

வலிகாமம்தெற்கு, நவ. 21 தமிழீழ முதனிலை, இளநிலை தேர்வுகளுக்கான விடைத்தாள் மதிப்பீட்டு பணி உடுவில் கல்விக் கோட்டத்தில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. (க-152)

தமிழ் மாமன்றம்

இருபாலை, கோப்பாய்.

முக்கிய அறிவித்தல்

ஆண்டு தோறும் நடத்திவரும் தமிழ்மொழித்திறன் தேர்வு இவ்வருடம் (1994) எமது மன்றத்தால் நடத்தப்படமாட்டாது. அத்துடன் இது தொடர்பாக போட்டி விண்ணப்பப் படிவங்களை மன்றம் கோரவும் இல்லை என்பதை எமது நலன் விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம்.

மேலும் எமது மன்றின் விண்ணப்பப் படிவங்கள் போட்டித் தாள்கள் அனைத்திலும் மன்ற இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும். எமது மன்றம் எனக் கருதி போலி விண்ணப்பப் படிவங்களை பெற்று ஏமாற்றம் அடைய வேண்டாம்.

க. சிவகரன்
தலைவர்

ந. மோகநேசன்
செயலாளர்

[8022]

கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளர்

திரு. இளையவன் மணி
அவர்கள்

15-11-1994இல் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும், மிக வேதனையும் அடைகிறோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணியாளர், பணிப்பாளர்.
ஊர்காவற்றுறை ப. தெ. வ. அ. கூ. சங்கம்.

(33841)

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
இரத்தினம்மா பொன்னுத்துரை

தோற்றம்:
10 — 12 — 1924

மறைவு:
22 — 10 — 1994

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குல விளக்காய் பூப்போன்ற புன்னகையும் பாச நினைவுகளாய் நெஞ்சுக்குள் நிறைந்திட்ட பேச்சொலியும் எங்கு சென்றதம்மா! எங்களுக்கு அன்பும் அறிவும் ஊட்டி ஆதரித்து எம்மை வாழ வைத்த தெய்வமே! உங்கள் பிரிவு எங்களை வாட்டுதம்மா! எங்கள் நெஞ்சில்- என்றும் உங்கள் நினைவு நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தலம்புகழ் சங்கானைக்கண் தனித்தனி வந்த மாந்தோய்
நலம்பயில் ஞானியூரும் நாயகா வடுகமூர்த்தி
குலம்புகழ் சிறப்பு மிக்கார் கோதையாம் இரத்தினம்மை
வலந்திகழ் திருத்தாள் சேர்ந்தார் வரமருள் போற்றி! போற்றி!!

என்றும் உங்கள் பிரிவால்
துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாரதி வீதி,
சங்கானை.

(33333)

ஒலிம்பிக் போட்டிக்கு 'ரக்பி' விளையாட்டு

ரக்பி விளையாட்டு, ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்படவுள்ளது.

இவ் வாரம் நடைபெறவிருக்கும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் திரு. சமராஞ் தெரிவித்தார்.

எனினும், ரக்பி விளையாட்டை ஒலிம்பிக் போட்டிகளில் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை — 1998 இல் மலேசியாவில் நடைபெறவிருக்கும் கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டியில் முதல் தடவையாக ரக்பி, ஹொக்கி மற்றும் கிரிக்கெட் விளையாட்டுகள் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

போராட்டத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடும் நாசகார நோக்கில் இந்தப் பிரசாரப் போர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

பொய்மையையே பிரதான ஆயுதமாகக் கொண்டு, எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக்கருத்துப் போரை முறியடிக்க, நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். அந்த உண்மையின் குரலாகவே 'புலிகளின் குரல்' ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு. அவை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் சென்றுவிடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப் போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மைநிலைமையை எடுத்து சொல்லவேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்கவேண்டும். உண்மையையும் நேர்மையையும் தார்மிக நெறியாகக் கொள்ள வேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துகளே மக்களைக் கவர்ந்து கொள்கின்றன. மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்கின்றன.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித் தொகுப்பாக கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக, மக்களுக்கு எடுத்துக் கூறி, எமது வானொலி மக்களின் நல்லெண்ணத்தை பெற்று வருவதைக் காண நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். புலிகளின் குரல் வானொலியின் அபாரமான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்து வரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

'புலிகளின் குரல்' தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லாசிகள்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

மாவீரர் நினைவாலயம் திறப்புவிழா

இன்று (21-11-1994) திங்கட்கிழமை காலை 9.00 மணி.
இடம்: பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்

- ★ தேசியக்கொடி ஏற்றல் — செல்வி பொ. தேன்மொழி
  (யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அமைப்பு துறைப் பொறுப்பாளர்)
- ★ ஈகைச்சுடர் ஏற்றல் — செல்வி அர்ச்சுனா
  (தமிழீழ மகளிர் அமைப்பு, மாவீரர் பணிமனை பொறுப்பாளர்)
- ★ மாவீரர் நினைவாலயம் திறந்து வைத்தல் — திரு. வீ. தங்கன்
  (மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர், திருகோணமலை)
- ★ மாவீரர்களின் உருவப்படத்திற்கு பெற்றோர்கள் சுடர் ஏற்றி மாலை அணிவித்தல்
- ★ மலர் அஞ்சலி
- ★ மௌன வணக்கம்

மாவீரர்கள் மாண்புரைகள்

தலைமையுரை:
திரு. நா. த. அன்னலிங்கம் (பொதுச் செயலாளர், வணிகர் கழகம், யாழ்ப்பாணம்)
செல்வி பொ. தேன்மொழி (யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அமைப்பு துறை பொறுப்பாளர்)
திரு. சி. இளம்பரிதி (யாழ்ப்பாண மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர்)
திரு. சு. அரசண்ணா (நடுவப் பணியகம்)
திரு. வீ. தங்கன் (மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர், திருகோணமலை)
திரு. சொலமன் சூ. சிறில் (மாவீரர் ஏற்பாட்டுக்குழு, யாழ். வட்டம்)

எமது அழைப்பை ஏற்று நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைத்து தமிழீழ மக்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

— மாவீரர் ஏற்பாட்டுக் குழு,
யாழ்ப்பாண வட்டம்

(33845)

நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி
1995 ஆம் ஆண்டிற்கான
கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள் இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1995 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 06-12-1994 ஆம் திகதி காலை 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேசசபை செயலாளரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 24-11-1994 தொடக்கம் 05-12-1994 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேசசபை திருநெல்வேலி'' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ''பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் கடித உறையில் இடதுபக்க மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 06-12-1994 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் நல்லூர் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல்வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 06-12-1994 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கவும். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் கம்முடன் அடையாள அட்டையும், குடும்ப அட்டையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடம் இருந்து சம்மதக்கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையில் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குத்தகை விவரம்	அட்டவணை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம்	மதிப்பீட்டு தொகை
01. திருநெல்வேலி மத்திய சந்தை	200/-	2,500/-	2,76,100/-
02. திரு. சந்தை துவி. ச. வ பாதுகாப்பு நிலையம்	200/-	500/-	8,250/-
03. கொக்குவில் ஆடியபாதம் சந்தை	200/-	1,000/-	16,500/-
04. திரு. சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1	200/-	3,000/-	34,100/-
05. திரு. சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 2	200/-	3,000/-	34,100/-
06. 327, பலாலி வீதி ஆ. இ. கடை	200/-	3,000/-	16,610/-
07 கோயில் தோட்டம் மா. இ. கடை	200/-	3,000/-	5,610/-
08. கொண்டாவில் குமார் வீதி மா. இ. கடை	200/-	3,000/-	5,610/-
09. இணுவில் மஞ்சத்தடி மா. இ. கடை	200/-	3,000/-	22,110/-
10. ஆ/சந்தை ஆ. இ. கடை	200/-	3,000/-	19,030/-
11. ஆ/சந்தை மா. இ. கடை	200/-	3,000/-	22,110/-
12. கொக்குவில் உப - அலுவலக மா. இ. கடை	200/-	3,000/-	19,910/-
13. கொக்குவில் உ. அ. மா. இ. கடை	200/-	3,000/-	34,100/-
14. கொண்டாவில் ஸ்ரேசனடி மா. இ. கடை	200/-	3,000/-	4,235/-

திருமதி கமலா சிவசிதம்பரம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
18-11-1994

[சி-9706]

றோட்டரக்ட் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். றோட்டரக்ட் கழகத்தால் ''தொழில் வழிகாட்டி'' எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, கணனி விரிவுரையாளர் திரு. கண்ணன், திரு. கயிலைநாதன் ஆகி உரை நிகழ்த்துவார்கள். (க)

நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

தெல்லிப்பழை, நவ. 21

அளவெட்டியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி போடும் நடவடிக்கை இன்று முதல் மூன்று தினங்களுக்கு இடம்பெறும்.

இன்று 21 ஆம் திகதி மாரியம்மன் கோயிலடி, கலைநகர் வாசகசாலை, நாகணாவத்தை வாசகசாலை, குருவளை செபஸ்தியான் கோயிலடி ஆகியவற்றிலும்—

நாளை கொம்பளிப்புலம் - செருக்கைப்புலம் வாசகசாலை, பெருமாள்கடவை மலைவேம்படி ஆகியவற்றிலும்—

நாளை மறுதினம் பத்துப் பழையடி, கும்பிளாவளை, மணல்புலம் வாசகசாலை, அலுக்கை சேர்ச் ஆகியவற்றிலும் தடுப்பூசி போடப்படும். (க-68)

முதலாவது

பிறந்த நாள் வாழ்த்து

21 — 11 — 1994

செல்வன் கெஜரூபன்

தாவடிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த
சிவசங்கரக்குருக்கள் உமாதேவி தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன் கெஜரூபன்
தனது முதலாவது பிறந்தநாளை, இன்று **21-11-94**
திங்கட்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

கெஜரூபனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ரவிப் பெரியப்பா, ஈஸ்வரிப்பெரியம்மா, கேசவன் அண்ணா, சாந்தா அத்தை, கந்தரோடையில் வசிக்கும் தாத்தா, பாட்டி, வாகீஸ்மாமா, காயத்திரி மாமி. சங்குவேலியில் வசிக்கும் பெரியப்பா, உஷா பெரியம்மா, ராஜீவன் அண்ணா, தங்கை ஐஸ்வர்யா, கோப்பாயில் வசிக்கும் பெரியப்பா, சாந்திப் பெரியம்மா, சுஜன் அண்ணா, சரசாலையில் வசிக்கும் ராசன் மாமா, சித்ரா அத்தை, மச்சான்மார் ராம், ஸ்ரீ, நிதிஸ் மற்றும் கிளிநொச்சியில் வசிக்கும் பவா மாமா, கௌரி அத்தை, ஜீவா மச்சான், மட்டுவிலில் வசிக்கும் பூட்டி மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் பெற்று, தாவடி வேத விநாயகரின் அருளைப் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[7811]

மாவீரர் வார

வேண்டுகோள்

''தாய் மண் மீட்பிற்கு தம்மையே தந்தவர்கள்
களத்திலாடி கல்லறையில் துயில்பவர்கள்
குனிந்த தலையை நிமிர்ந்திடச் செய்தவர்கள்
கும்பிட்ட கரங்களில் குண்டுகள் ஏந்திடச் செய்தவர்கள்
உலக வரலாற்றில் உன்னத சாதனை புரிந்தவர்கள்
ஆம்! நம் மண்ணில் விதைக்கப்பட்டவர்களே
— இம் மாவீரர்கள்''

மாவீரர் வாரத்தை உரிய ஒழுங்கமைப்பின் பிரகாரம் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களினதும், இரண்டாம் படி கூட்டுறவுச் சமாசங்களினதும் அனைத்து பணிப்பாளர்களையும் பொதுச்சபை, கிளைக்குழு உறுப்பினர்களையும் கூட்டுறவாளர்களையும் பொது மக்களையும் பணியாளர்களையும் இது தொடர்பான நிகழ்வுகளில் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றி அனுஷ்டிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர்,
யாழ்ப்பாண மாவட்டக்
கூட்டுறவு சபை

(சி-9708)

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

இராணுவத்தின் புதிய வியூகம்!

மாவீரர் வாரம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் நாற்பதாவது பிறந்த தினம் ஆகிய இரு முக்கிய நிகழ்வுகளை ஒட்டி விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல்களை நடத்தக் கூடும். அத்தகைய நிலையை எதிர் கொள்வதற்காகப் படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகிறது. இவ்வாரத்தை ஒட்டியோ அல்லது மாவீரர் நாளன்றோ விடுதலைப் புலிகள் இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்துகிறார்களோ இல்லையோ —

அவர்களின் தாக்குதல்களை எதிர் கொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுவது, புலிகளை வலுச் சண்டைக்கு இழுப்பதாகும்.

நாங்கள் சண்டைக்குத் தயாராக இருக்கிறோம்; எங்கே எங்களைத் தாக்குங்கள் பார்க்கலாம்; என்று இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்குச் சவால் விடுவதாகவே இதனைக் கொள்ளலாம்.

அதாவது சந்திரிகாவின் புதிய அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வருமாறு விடுதலைப் புலிகளை அழைத்து ஒரு சுற்று பேசிய பின்னரும் கூட—

சமாதானப் பேச்சுக்கு ஏன் உடன்பட்டீர்கள்; எங்களோடு போர் புரிய வாருங்கள் என்ற வாறு வலிந்து அழைக்கும் போக்கு இது.

விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்று எதிர்பார்த்தால், அல்லது அது சம்பந்தமான ஊர்ஜிதமான புலனாய்வு அறிக்கைகள் இராணுவத்துக்குக் கிடைத்தால்—

அவற்றை வெகு இரகசியமாக வைத்து, தம்மைத் தயார்ப்படுத்தி, பலப்படுத்தி, எதிர்த்தாக்குதலுக்கான இராணுவ உத்திகளை வகுத்து, அவற்றை மிக இரகசியமாக வைத்திருந்து, செயற்படுவதுதான் விவேகமானது. அவற்றைச் செய்தியாளர்களுக்கு அம்பலப்படுத்த வேண்டிய தேவை இல்லை.

எனவே, இராணுவத்தின் இப்போதைய நிலை; சமாதானப் பேச்சுகளுக்கு இணங்கி அந்தப் பாதையில் காலடி பதித்துவிட்ட விடுதலைப் புலிகளை, போருக்கு அழைத்து அதனைத் தொடர்வது தான்!

போரைத் தொடர்ந்து நடத்தி தமிழர்களைக் கொல்வதே முந்திய அரசின் கொள்கையாக இருந்தமையால், விடுதலைப் புலிகளை சண்டைக்கு வலிந்து அழைக்க வேண்டிய தேவை இராணுவத்துக்கு அப்போது இருக்கவில்லை.

ஆனால் இப்போது, சந்திரிகா அரசு சமாதானத் தீர்வு என்று கூறிக்கொண்டிருக்கையில், விடுதலைப் புலிகளை வலிந்து அழைத்து, சமாதானச் சூழ்நிலையைக் குழப்பி, போரைத் தொடர்வது இராணுவத்தின் புதிய வியூகமாக மாறியிருக்கிறது!

போர் நிறுத்தம் செய்து கொள்வதை இராணுவத் தலைமைப்பீடம் விரும்பவில்லை. அத்துடன் போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், எக்காரணம் கொண்டும் போருக்கான தயாரிப்பு வேலைகளைக் கைவிட இராணுவம் தயாரில்லை — என்று பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஹமில்டன் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

சமாதானம் என்று வாய் கிழியக் கத்தியவர் சந்திரிகா. படைகளின் பிரதம தளகர்த்தரானதும் —ஜனாதிபதியானதும்— அது குறித்து மூச்சுவிடாமல் இருப்பதன் உள்ளார்ந்தம் இப்போது வெளியரங்கமாகி விட்டது! படை அதிகாரிகளின் போரைத் தொடர்வது என்ற ஆலோசனையை அப்படியே உள்வாங்கிக் கொண்டு, சமாதான நாட்டத்தில் ''தளர்கத்தராகி'' — கத்துவதை தளர்த்தியவர் — ஆகி விட்டார்!

சமாதான முயற்சி இனியும் ''மறுபிறவி'' எடுத்து வரும் என்பது சந்தேகம் தானா!

போர் நிறுத்தத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் சூழ்நிலை எழுந்துள்ளது.

மக்கள் மத்தியில் பெரிய கேள்விக்குறி

உண்மையில் இந்த அரசியலில் என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகிறது? உருப்படியாக ஏதாவது வருமா? இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடருமா? அதன் மூலம் சமாதானம் ஏற்படுமா? — என்ற பெரியதொரு கேள்விக்குறி மக்கள் மத்தியில் இருக்கிறது.

''தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதில் சந்திரிகா மிகவும் ஆர்வமாகத் தான் இருந்தார். ஆனால் கொழும்பில் இடம் பெற்ற குண்டு வெடிப்புடன் அவரின் ஆர்வம் எல்லாம் போயிற்று; அவர் பதற்றப் பட்டுப்போனார்; குழம்பிப் போனார்; அதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிப் போனார்'' — என்று சிலபேர் சொன்னார்கள்.

கொழும்பில் குண்டுகள் வெடிப்பது இயல்பு. அதை யார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அது எமனுக்குத்தான் தெரியும் என்று புதுவை சொல்வார்.

அது யார் செய்தார்கள் என்பது பிரச்சினை அல்ல; இத்தகைய குண்டுகள் ஏன் வெடிக்கின்றன? அதில் பலியானவர்கள் எப்படி யானோர்? என்பதைச் சிந்தித்துப் பார்த்தால்........

தமிழ் மக்களுக்கு எதிராக — பெரிய இனப் படுகொலையைத் திட்டமிட்டு நடத்தி — இரத்தக் களரியை ஏற்படுத்தி — அவ்வாறான கொலைகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் — அந்த இரத்தக் கறை படிந்தவர்கள்தான் இத்தகைய குண்டு வெடிப்புக்கு ஆளாகுகின்றனர் என்ற உண்மை மட்டும் தெரியும்.

இது ஒரு வித்தியாசமான பரிமாணத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

கர்மவினையே!

சிங்களவர்களுக்கும் தமிழர்களைப் போல கர்மவினையில் நம்பிக்கை இருக்கிறது. இந்தப் பிறப்பில் செய்த பாவங்களுக்கு அடுத்த பிறப்பில் உத்தரிப்பதுதான் கர்மவினை.

ஆனால் இங்கு நடப்பது என்னவென்றால் இந்த வாழ்க்கையிலே — இந்த உலகத்திலே — செய்த அநியாயங்களுக்கு, பாவங்களுக்கு அடுத்த பிறப்பு எடுக்கத் தேவையில்லை; இப்பொழுதே — இங்கேயே — அந்த கர்மவினை போக்கப்படுகின்றது.

ஆகவே இத்தகைய கர்மவினை செய்தோர் அடுத்த பிறப்பு என்ற பிரச்சினை இல்லாமல் போய்ச் சேர்கிறார்கள். இது அவரவர் செய்த பாவத்துக்கு அவரவர்களுக்குக் கிட்டுகிறது. அது யார் செய்தாரோ எனக்குத் தெரியாது.

சந்திரிகாவுக்கு அது நன்மையே!

ஆனால் சந்திரிகா அம்மையார் இதையிட்டு கலங்கத் தேவையில்லை. ஏதோ ஒரு வகையிலே அவருக்கு ஒரு நன்மையாகவே அது அமைந்திருக்கிறது.

ஏனென்றால் —

தொண்டமான் போன்றோர் தேர்தலுக்கு முன் வேதாளம் போல் கொப்பில் தொங்கிக்கொண்டிருந்தார்கள். — அந்தப் பக்கம் பாய்வதா அல்லது இந்தப் பக்கம் பாய்வதா என்று தெரியாமல் — ஆனால் இந்தக் குண்டு வெடிப்புடன் இந்தப்பக்கம் — சந்திரிகா பக்கம் — பாய்ந்து விட்டார்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு மத்தியிலும் பெரும்பான்மைப் பலத்துடன் சந்திரிகா ஆட்சிக்கு வந்திருக்கிறார்.

அது வேறு விடயம்.

இதற்கும் பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தம் இல்லை.

பேச்சுவார்த்தை ஒழுங்கான முறையில் நடந்தது. இங்கு வந்த சிங்கள அரசுப் பிரதிநிதிகளை நாங்கள் வரவேற்று — நட்புறவுடன் — நல்லெண்ணத்துடன் பேச்சு நடத்தினோம்.

இந்தப் பேச்சுக்களை எமது இயக்கம் ஒத்திப்போடவில்லை. அவர்கள்தான் ஒத்திப்போட்டார்கள்.

இப்போது நிலைமை என்ன?

குண்டு வெடித்து பல காலமாகி விட்டது; தேர்தல் நடந்தது; சர்வ அதிகாரங்களுடன் சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வந்திருக்கிறார். நல்ல விஷயம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசுவதை அவர் கைவிடவில்லை. பேசப் போகிறார்.

ஆனால் மிகவும் அவதானமாக — நட்பாக — மெல்ல மெல்ல காலடி எடுத்து வைத்து — காய்களை நகர்த்த அரசாங்கம் விரும்புகின்றது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். நல்ல விடயம்.

நமது சமாதானக் கதவு நித்தமும் திறந்திருக்கும்

எமது சமாதானக் கதவு நித்தமும் திறந்து கிடக்கும். எப்போதும் வரலாம்.

பேச்சுவார்த்தை விரைவில் நடக்கும்.

பேச்சில் சிக்கல் இல்லை. ஆனால் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் முட்டுக்கட்டையாக ஒரு சக்தி நிற்கிறது. அந்த சக்திதான் சிங்கள ஆயுதப்படைகள்; சிங்கள இராணுவம்.

நாங்கள் முன்னர் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் மூன்று விடயங்களை வலியுறுத்தினோம்.

★ போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.

★ போக்குவரத்துப் பாதை திறக்கப்பட வேண்டும்.

★ பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படவேண்டும்.

—இவற்றையே வலியுறுத்தினோம்.

ஏனென்றால் தமிழீழ மக்களின் அவசர பிரச்சினைகளை — அன்றாடப் பிரச்சினைகளை—உடனடிப் பிரச்சினைகளை—முதலில் தீர்த்து வைப்போம்; அதற்குப் பிறகு அடிப்படைப் பிரச்சினைகளைப் பார்ப்போம் என்று சந்திரிகா அரசு கூறியது.

நாமும் அதற்கு இணங்கினோம்.

ஏனென்றால்—

மக்கள் நீண்டகாலம் யுத்தத்தால் — போர் சூழ்நிலையால் — பெரிதாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஏகப்பட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை எமது மக்கள் சந்தித்திருக்கிறார்கள். இவர்களுக்கு மூச்சுவிட ஒரு சந்தர்ப்பம் வேண்டும். அவர்களின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இதனால் அதனை நாம் வரவேற்றோம்.

இதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்புத் தருவோம்; இந்தப் போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வருவோம்; பொருளாதாரத் தடைகளை நீக்குவோம்; மக்கள் இலகுவாகப் போக்குவரத்து நடத்துவதற்குப் பாதைகளைத் திறந்து விடுவோம்-என்று சொன்னோம்.

இராணுவ ஒத்துழைப்பு அவசியம் தேவை

இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதானால் அதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் ஒத்துழைக்க வேண்டும். ஆனால் இராணுவம் ஒத்துழைப்பதாக இல்லை

போர் நிறுத்தம் என்றாலும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஒத்துழைப்புத் தேவை. ஆனால் போர் நிறுத்தத்துக்கு அவர்கள் இணங்குவதாக இல்லை.

பாதையைத் திறப்பதானாலும் பூநகரியிலிருந்து இராணுவம் விலக வேண்டும். அதற்கும் தாங்கள் ஓர் அங்குலம் கூட அசைய மாட்டோம் என்று இராணுவம் கூறுகிறது.

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குவதற்கு ஒத்துழைக்கவும் இராணுவம் மறுக்கிறது. டீசல், பெற்றோல், உர வகைகள் இங்கு அனுமதிக்க முடியாது என இராணுவம் கூறுகின்றது.

எனவே தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளான இந்த மூன்று விடயங்களையும் தீர்ப்பதற்கு இராணுவம் முட்டுக்கட்டையாக நிற்கிறது.

சந்திரிகா பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பலாம். ஆனால் ''சிவபெருமான் விரும்பினாலும் பூசாரி விட்டுக் கொடுக்க மாட்டான்'' என்பது போல இராணுவம் நந்தி போல இடையில் குந்தி இருக்கிறது.

தங்களுக்கு இராணுவத்தைக் கட்டுப்படுத்த போதிய அதிகாரம் இல்லை; அதிகாரம் காணாது என்று கடந்த தடவை பேச்சுவார்த்தைகளின் போது எமக்குக் கூறப்பட்டது. தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும்— நீங்கள் கேட்கும்— இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதானால் எமக்கு முழுமையான ஆட்சி அதிகாரம் வேண்டும் என்றார்கள்.

இரண்டு அரசுகள்

அந்த வேளை கொழும்பில் இரண்டு அரசுகள் இருப்பதாகக் கூறினார்கள். ஒன்று நாடாளுமன்ற அரசு; மற்றையது ஜனாதிபதி அரசு; ஜனாதிபதிக்குத்தான் சர்வ அதிகாரங்களும் இருக்கின்றன; அவர்தான் முப்படைத் தளபதி; பாதுகாப்பு அமைச்சர்; அவர் மற்ற [illegible] சேர்ந்தவர் என்பதால் இந்தக் கோரிக்கைக்கு இணங்கமாட்டார்; எமக்கு முழு அதிகாரமும் வரட்டும்; நாங்கள் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறோம் என்று கூறினார்கள்.

இப்போது அந்த அதிகாரம் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல; மக்களிடமிருந்து ஒரு மனுவும் கிடைக்கப் பெற்றிருக்கிறது.

அதாவது தமிழரின் பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கான— பெரும்பான்மை சிங்களவரின் ஆணை— மனு— இந்த அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.; அத்துடன் சகல அதிகாரங்களும் இந்த அரசுக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது.

அவரே ஜனாதிபதி; தாயாரே பிரதமர். இப்படியாக ஒரு குடும்பத்தின் கையில் அரசாங்கம் போயிருக்கிறது. இனி என்ன தேவை உங்களுக்கு?

வந்து பேசலாம்; பேசி பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

முட்டுக்கட்டையாக இராணுவத் தலைமை

ஆனால் எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்படி— இன்னும் பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு இராணுவத் தலைமை முட்டுக்கட்டையாக உள்ளது.

தலைவர் பிரபாகரன் ஒரு வார கால யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்தார். போர் நடவடிக்கைகளை ஒரு வாரத்துக்கு நிறுத்தி வைத்தார்.

சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றதை அடுத்து சந்திரிகா அரசுக்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக இந்தப் போர் நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

அதனை நீங்கள் அரசுக்கு அறிவித்தால் என்ன? என்று சில பேர் கேட்க முடியும்.

அரசாங்கமே எங்களுக்கு அறிவிக்கிறது— நாங்கள் செய்த போர் நிறுத்தம் குறித்து.

இந்தப் போர் நிறுத்தத்தை பிரகடனம் செய்து, பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி, இதை மக்களுக்கு நாம் தெரிவிப்பதற்கு முன்னர்— ஸ்ரீலங்காப் புலனாய்வுத்துறை அதனை ஒட்டுக் கேட்டு— இவ்வாறு புலிகள் பிரகடனம் செய்திருப்பதாக உலகம் முழுவதும் கூறி, வானொலிகள் எல்லாவற்றிலும் வந்தது.

அதற்குப் பிறகு நாம் உத்தியோகபூர்வமாக எழுதத் தேவையில்லை. ஏனென்றால் அவர்களின் அரச நிறுவனம் ஒன்றுதான் அதனைக் கேட்டிருக்கிறது; திரு பிரபாகரனின் குரலில் அது பதியப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறது. அதன் பின் நாம் அதனைப் பகிரங்கப்படுத்தினோம். அதன் நோக்கத்தை வெளிப்படுத்தினோம். அதுமட்டுமல்ல. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அதனை உத்தியோக பூர்வமாக— அரசுக்கு— பாதுகாப்பு அமைச்சுக்கு— அறிவித்தோம்.

ஆனால் அரசு பேசாமல் இருந்தது. அரசு ஒரு புறமிருக்க—

கடற்படை கரையோரப் பகுதிகளில் தாக்குதல் நடத்தி எமது மீனவர்களைக் கொல்லுகின்றது; விமானப் படை ஹெலிகள் மக்கள் பகுதிகளில் வேட்டுக்களை விடுகிறது; பயணிகள் பஸ்களைத் தாக்குகின்றது; சும்மா இருந்தவர்கள் எழும்பி வந்து— புலிகளின் பிரகடனத்தை அடுத்து— இந்தத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

எமது மூத்த தளபதி லெப்டினன்ட் கேணல் அமுதனை பதுங்கியிருந்து — நேரில் தாக்கினால் கூட பரவாயில்லை— ஒளிந்திருந்து தாக்கி சுட்டுக் கொன்றார்கள். அதுமட்டுமல்லாமல் அந்தத் தளபதியின் தலையையும் வெட்டி எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

இது ஒரு தேவையில்லாத சேஷ்டை அல்லவா?

இங்கு திரு. பிரபாகரன் நேசக்கரம் நீட்டுகிறார்; அவர்கள் கழுத்தை வெட்டி எடுத்துக் கொண்டு போகிறார்கள்.

அப்படி என்றால் நாம் எப்படி சமாதான சமிக்ஞைகளை காட்டுவது?

பணம் சம்பாதிப்பதில் இராணுவம் நாட்டம்

இராணுவத்துக்கு யுத்த நிறுத்தத்தில் விருப்பமில்லை. ஏனென்றால் இராணுவமேல் மட்டம் இந்த யுத்தத்தால் பெரும் பணம் சம்பாதிக்கிறது.

[illegible] வேறு வகையிலும் [illegible] பணத்தைச் சுருட்டுகிறார்கள்.

யுத்தம் இருந்தால் தான் அவர்கள் கோடீஸ்வரர்களாக முடியும்.

இராணுவ இடைமட்டம் வவுனியா போன்ற இடங்களில் இருந்து கொண்டு போய் வரும் வியாபாரிகளிடமிருந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது.

இராணுவம் யுத்தத்தால் பயனடைவது ஒருபுறமிருக்க—

யுத்த நிறுத்தம் செய்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமாக நடமாடுவார்கள்; சில சமயம் எங்களைப் பின்னோக்கிப் போகச் செய்வார்கள்; அதை நாம் ஏற்க முடியாது. என்ற காரணங்களைக் காட்டி இராணுவம் யுத்த நிறுத்தத்துக்கு மறுக்கிறது.

இந்த யுத்த நிறுத்தத்தை தலைவர் பிரபாகரன் ஏற்கனவே கூறியது போல அந்த நேரத்திலேயே அனுஷ்டித்திருந்தால் பல பிரச்சினைகளை — பல வன்முறைச் சம்பவங்களை — தவிர்த்திருக்கலாம்.

எமது போர் நடவடிக்கை ஒவ்வொன்றும் ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறது; யுத்த நிறுத்தம் செய்யாததால் இந்த அடி விழுகின்றது என்பது அதில் ஒன்று.

இப்போது யுத்த நிறுத்தம் செய்து அது நேற்றுடன் முடிவடைந்து விட்டது.

இனி என்ன செய்யப்போகிறோம்?

பிரபாவுக்குக் கடிதம்

கேணல் ரத்வத்தை தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்று அனுப்பியிருக்கிறார். இன்று தான் அந்தக் கடிதம் தலைவருக்குக் கிடைத்தது.

''நீங்கள் யுத்த நிறுத்தம் செய்தீர்கள். எமக்கு அது பற்றித் தெரியாது. எமக்கு அது குறித்து அறிவிக்கப்படவில்லை'' — என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அது பொய், ஏனென்றால் இந்த யுத்த நிறுத்தத்தை சர்வதேச உலகத்துக்கும் —பி.பி.ஸிக்கும்— மற்றைய பத்திரிகைகளுக்கும் கொடுத்தது அரசாங்கம் தான்.

அரசின் புலனாய்வுத்துறை மூலம் தான் இந்தச் செய்தி கொடுக்கப்பட்டது; நாங்களும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் பாதுகாப்பு பிரதி அமைச்சரான அவருக்கு தெரியப்படுத்தினோம்; நாங்கள் மறைத்து செய்யவில்லை; பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடுத்துள்ளோம்.

அந்தக் கடிதத்தில் —

''நீங்களும் இனிமேல் யுத்த நிறுத்தத்துக்கு இணங்குவீர்களானால் நாங்களும் இன்னும் ஓரிரண்டு கிழமைகளுக்கு யுத்த நிறுத்தம் செய்யலாம். — என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ள முக்கிய அம்சத்தை அவதானிக்க வேண்டும்.

அதாவது நாங்கள் ஏற்கனவே ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தம் செய்திருக்கிறோம். அதை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகக் காட்டியிருக்கிறோம்.

இப்போது அவர்கள் தாங்கள் அப்படி ஒருதலைப்பட்சமாகச் செய்யாமல் — நீங்கள் இன்னும் ஒரு தடவை செய்யுங்கள்—நாங்கள் அதற்குப் பிறகு செய்கிறோம்—என்ற மாதிரி உள்ளது. அதையும் நாங்கள் நிராகரிக்கவில்லை.

தலைவர் அவர்களின் கடிதத்துக்கு பதில் எழுதியிருக்கிறார் — உங்கள் யோசனையைப் பரிசீலனைசெய்வதாக.

ஆனால் தலைவர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நல்லெண்ண நடவடிக்கையாக விடுதலைப் புலிகள் போர்நிறுத்தம் செய்த காலத்தில் உங்கள் இராணுவம் இன்ன, இன்ன கொடுமைகளைச் செய்ததாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே போர் நிறுத்தம் செய்வது இங்கு முக்கியமல்ல. அந்தப் போர் நிறுத்தத்தை உங்கள் இராணுவம் கடைப்பிடிக்குமா? கட்டுப்பாடாக இருக்குமா? என்பது தான் கேள்வி.

இருவரும் போர் நிறுத்தம் செய்வதாக வெறுமனே கூறிக்கொண்டு, இந்தப் போர் நிறுத்தத்தை நம்பி—நாங்கள் கொழும்புக்குப் போக முடியாது. கொழும்பில் வைத்து என் கழுத்தை யார் வெட்டுவார்கள் என்பது தெரியாது.

''இப்படி எமது தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அவரின் தலையைத் துண்டித்துக் கொண்டுபோய் விட்டார்கள். இது பற்றி நீங்கள் துயவு செய்து விசாரணை செய்யுங்கள். விசாரணை செய்து எமக்கு ஒரு பதிலைத் தாருங்கள். அதன் பின்னர் எமது முடிவைக் கூறுகிறோம்.'' — எனத் தலைவர் எழுதியுள்ளார்.

தலைவர் இந்தக் கடிதத்தில் ''இருவரும் சேர்ந்து கூட்டடியாகப் போர் நிறுத்தம் செய்வோம்'' என்று கூறவில்லை.

தலைவரின் நோக்கம்

தலைவரின் நோக்கம் என்னவென்றால் போர்நிறுத்தம் என்ற அறிவிப்பு முக்கியமல்ல; போர் நிறுத்தம் முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதுதான். இராணுவம் ஒழுங்காக இருக்க வேண்டும்; மக்களுக்கு உயிராபத்துக்கள் வரக்கூடாது; போராளிகளுக்கும் உயிராபத்துகள் வரக்கூடாது.

அப்படியான — ஒரு நிலையான - உண்மையான போர் நிறுத்தம் வரவேண்டும்.

அதற்காக முதலில் நெடுங்கேணியில் என்ன நடந்தது என்பதை முதலில் விசாரித்து எமக்கு பதிலைக் கூறுங்கள். வெட்டி எடுத்துச் சென்ற தலைக்கு என்ன நடந்தது என்பதைச் சொல்லுங்கள்.

இலங்கை வானொலி இருட்டடிப்பு

இப்படியான — எங்களுக்குச் சாதகமான— விடயத்தை இலங்கை வானொலி இருட்டடிப்புச் செய்கிறது.

தலைவர் பிரபாகரன் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம் அறிவித்தவுடன்—

பத்துத் தொன் ஆயுதங்களுடன் ஒரு கப்பல் — அது எங்கிருந்து வருகிறது என்பது தெரியாது — வருவதாக ஒரு செய்தி வெளியிடப்படுகிறது. ஏன் இத்தகைய வீண் புரளியைக் கிளப்பி விடுகிறார்கள்?

இராணுவம் இத்தகைய வீண் புரளியைக் கிளப்பி விடுகிறது. ஸ்ரீலங்கா வானொலி அதைப் பெரிதுபடுத்துகிறது.

ஏனென்றால் —

தலைவர் பிரபாகரன் இந்த யுத்த நிறுத்தத்தை சும்மா செய்யவில்லை. எங்கேயிருந்தோ கப்பலில் பொருள்கள் கொண்டு வருகின்றார். அதற்கு எம்மை ஏமாற்றுவதற்காகத்தான் யுத்த நிறுத்தம் செய்கிறார் என்று சிங்கள மக்கள் மத்தியில் ஒரு கேள்விக் குறியை — சந்தேகத்தை — ஏற்படுத்துவதற்காகவே இத்தகைய புரளியை சிங்கள மக்கள் தொடர்புச் சாதனங்கள் கட்டவிழ்த்துவிட்டன.

இப்படியாக காலத்துக்குக் காலம் தங்களுக்கு சாதகமான காலத்தில் நல்ல செய்திகளையும், தங்களுக்குப் பாதகமான காலத்தில் எங்களுக்கு மாறான செய்திகளையும் அங்குள்ள தொலைத் தொடர்பு சாதனங்கள் செய்து வருகின்றன; இந்தியாவும் செய்து வருகின்றது.

ஆனால் இங்கு எங்கள் மக்கள் தொடர்பு சாதனங்கள் நேர்மையாக — உண்மையாக — செய்திகளை மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

அத்தகைய உண்மைச் செய்திகளின் அடிப்படையில் தான் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை பிறக்கும்.

தலைவரின் பதில்

தலைவர் பிரபாகரன் பிரதி பாதுகாப்புஅமைச்சர் கேணல் ரத்வத்தைக்கு கடிதம் எழுதியுள்ளார். யோசனையை பரிசீலனை செய்வதாகத் தலைவர் தெரிவித்துள்ளார்

யுத்த நிறுத்தம் குறித்து அறிக்கை விடுவதில் அர்த்தமில்லை.

இராணுவம் பிடித்த இடத்தில் இருந்து விலகமுடியாது என்று கூறுவது பேச்சுக்கு இடையூறாக உள்ளது.

எமது அகதிகள் மீளவும் தமது இடங்களுக்கு திரும்புவதற்கு இராணுவம், தான் பிடித்த இடங்களில் இருந்து விலகவேண்டும். இது முக்கிய விடயம்.

மக்கள் மீளக்குடியேற வசதியாக இராணுவம் பிடித்த இடங்களில் — இருந்து — விலகினால் பேச்சுக்கள் முன்நோக்கிச் செல்லும். இராணுவம் இந்த விடயத்தில் விடாப்பிடியாக நின்றால் பிரச்சினைதான் வரும்.

பேச்சுக்கள் சீக்கிரம் ஆரம்பிக்கப் போகின்றன. நாம் பேச்சுகளுக்கு இடையூறாக இருக்கமாட்டோம். மக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் நாம் பேச்சுக்களில் பங்கு பற்றுவோம்.

சந்திரிகா செய்யவேண்டியது

சந்திரிகா அம்மையார் முதலில் செய்யவேண்டியது என்ன? இராணுவப் படைகளில் உள்ள போர் வெறியர்களையும், சமாதான விரோதிகளையும், பேச்சுவார்த்தைக்கு தடையாக உள்ளவர்களையும், பேரினவாதிகளையும் விலக்கி புலிகளுடனான பேச்சுக்களை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் பேச்சுவார்த்தை வெற்றி பெற முடியும் என நான் கருதுகிறேன்.

அதற்கான துணிவு சந்திரிகா அம்மையாரிடம் இருக்கின்றதா என்பதை எதிர்காலம் தான் சுட்டிக்காட்டும்.

ஆனால், நாங்கள் எந்த விதத்திலும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இடையூறாக இருக்க மாட்டோம். — என்றார். (உ-3-111)

தமிழீழ மீட்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கானை.

★ பிற்பகல் 4.00 மணி: இணுவில் இந்துக்கல்லூரியில் — உடுவில், தெல்லிப்பளை.

நாளை மறுதினம்

★ நாளை மறுதினம் காலை 9.00 மணி: கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்— கோப்பாய்.

★ முற்பகல் 11.30 மணி: சாவகச்சேரி தெய்வேந்திரா தியேட்டரில்—சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி.

★ பிற்பகல் 2.30 மணி; பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் — கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சிக் கிழக்கு.

(உ)

கூட்டணியின் யோசனை இரு வாரங்களில்

கொழும்பு, நவ. 21

புதிய அரசமைப்பு குறித்த தமது யோசனைகளை இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப் போவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு வடக்கு—கிழக்கு மக்கள் உடன்பாடாக உள்ளனர் என்பதை அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் எடுத்துக்காட்டியுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, நவ. 21

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

(க-152)

மாவீரர் துயிலும் இல்லம் சென்று வாருங்கள்!

எடுப்பு

மாவீரர் துயிலும் இல்லம் சென்று வாருங்கள்-அவர்
மௌனமொழி வீசும் தென்றல் காற்றில் கேளுங்கள்
(மாவீரர்)

தொடுப்பு

அறிதுயில்கொள் அவர்களைநீர் தாலாட்டுங்கள் - உங்கள்
அமைதியாக வாழ்த்துக்கூறி இளைப்பாற்றுங்கள்
(மாவீரர்)

முடிப்பு

உணர்வைமட்டும் வாங்கிக்கொண்டு வீடுவாருங்கள்
-உயிர்
ஓட்டமுள்ள இடங்களெல்லாம் உறுதிச்சொல்லுங்கள்
தினமுழிந்தச் சிந்தனையைச் செயலில்காட்டுங்கள்—எம்
தேசம்தமிழ் ஈழமாக மலரச்செய்யுங்கள்
(மாவீரர்)

சொல்லும்செயல் எண்ணமெல்லாம் துணிந்துநின்றவர்
- நற்
தூயதமிழ் ஈழமண்ணின் எல்லைகாத்தவர்
அல்லும்பகல் போர்புரிந்து களத்தில்வென்றவர்-அரும்
ஆற்றல்களால் உலகரட்டில் பெயர்பொறித்தவர்
(மாவீரர்)

—முருகனடியாள்.

மரண அறிவித்தல்கள்

Brigadier
MERCY DAVID
[Salvation Army]

இரட்சண்ய சேனையில் ஐம்பது வருடங்கள் சேவை செய்து, கடைசியாக யாழ்ப்பாண இரட்சண்ய சேனையில் சேவையாற்றிய பிரிகேடியர் மேசி டேவிட் அவர்கள் கொழும்பில் 17-11-94இல் கர்த்தருக்குள் மகிமையடைந்துள்ளார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் 19-11-94இல் நடைபெற்றது.

தகவல்:
வெஸ்லி டேவிட்
(மகன்)

தேவாலய வீதி,
சங்கானை.
(33819)

S. S. பொன்னம்பலம்
(முத்தையா)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட S. S. பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற இலிகிதர்) 20-11-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், உத்தமலிங்கம், சோமலிங்கம், கணேசலிங்கம், கமலாம்பிகை, சபாலிங்கம், யோகலிங்கம், ஞானாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சகுந்தலாதேவி, சறோஜினிதேவி, ஜெயதேவி, ஆனந்தன், பவானி, றேணுகா, பரராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-11-94 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சோமலிங்கர்,
பொ. சபாலிங்கம்.
(மக்கள்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(33839)

திருமதி கந்தையா மீனாட்சி
(பத்தர்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த கந்தையா மீனாட்சி அவர்கள் 20-11-1994இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையா பத்தர் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சரஸ்வதி, காலஞ்சென்ற சண்முகராஜா, திரு. குமாரசாமி, திருமதி கௌரி அம்மா, காலஞ்சென்ற நாகேஸ்வரி அவர்களின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம், மகேஸ்வரி, மகாலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-94) பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, அவரின் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
பரமேஸ்வரன் - நாகேந்திரராஜா,
பேரன் (ராஜன்) (குருவி).

122/3, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
[33843]

பொன்னையா நாகம்மா
(புங்குடுதீவு - 6)

புங்குடுதீவு இறுப்பிட்டி 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா நாகம்மா சனிக்கிழமை இரவு 19-11-94 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும் நாகநாதர் செல்லமுத்துவின் அன்பு மகளும் சின்னத்தம்பி வள்ளியம்மையின் மருமகளும் தம்பிராசா (ஜேர்மனி), கிருஷ்ணபிள்ளை (சுவிஸ்), தியாகராசா (அருச்சுனன்), தவமணி (கொழும்பு) அன்னபூரணி (ஜேர்மனி), இராசலிங்கம், மேனகை (புங்குடுதீவு), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகாலட்சுமி (ஜேர்மனி), தவமணிதேவி (புங். ப. நோ. கூ. சங்கம்), பரமலிங்கம் (மனோகரா-ஹோட்டல் கொழும்பு), முத்துலிங்கம் (ஜேர்மனி), சுகாதேவன் (புங்குடுதீவு) ஆகியோரின் மாமியாரும் ஆவார். தகனக்கிரியைகள் நேற்று மாலை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
பொ. தியாகராசா
(அருச்சுனன்)
(மகன்)

126, 2 ஆம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்.
(33851)

திருமதி சாந்தினி தர்மராஜா

சண்டிலிப்பாய் ஒழுங்கை சங்கானையைச் சேர்ந்த திருமதி சாந்தினி தர்மராஜா 11-11-94 இல் கனடாவில் காலமானார்.

இவர் கனடாவில் வசிக்கும் தர்மராஜாவின் அன்பு மனைவியும், கிரிஷாந்தின் (கனடா) பாசமிகு தாயாரும், கந்தையா பாக்கியத்தின் (கனடா) அன்பு மகளும், தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த சேனாதிராஜா-மங்களேஸ்வரி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-11-94 இல் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சேனாதிராசா
(மாமன்)

''இராஜ பவனம்''
சண்டிலிப்பாய் வடக்கு.
(33844)

திருமதி சாரதாம்பாள் சர்வேஸ்வரக்குருக்கள்
(கொக்குவில், மாத்தனை)

திருமதி சாரதாம்பாள் சர்வேஸ்வரக்குருக்கள் 19-11-94 சனிக்கிழமை இரவு காலமானார், இவர் காலம்சென்ற சர்வேஸ்வரக்குருக்களின் அன்பு மனைவியும், சதானந்தசர்மா, ரஞ்சிதானந்தக்குருக்கள், ஏரம்பநாதசர்மா, பாலநாகேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசரவணபவானந்தேஸ்வரசர்மா, உருக்குமணிதேவி, கல்யாணி, ஹேமலதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-11-94 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மாத்தனையில் நடைபெற்றன.

தகவல்:
ச. ஸ்ரீதரசர்மா

கொக்குவில்.
(சி/9709)

சமாதானப் பேச்சை இந்தியா தடுக்காது

'ரைம்' செய்தியாளர் நம்பிக்கை

வடமராட்சி, நவ. 21

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா ஒரு போதும் இடைஞ்சலாக இருக்காது என நம்புகிறேன். —என்று யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்க 'ரைம்' சஞ்சிகையின் புதுடில்லிச் செய்தியாளர் அனிதா பிரதாப் உதயன் செய்தியாளரிடம் பருத்தித்துறை இறங்கு துறையில் வைத்து தெரிவித்தார்.

''இலங்கையில் சமாதானமும், சாந்தியும் ஏற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாக இருக்கிறது. ஆதலால் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் சமாதானப்பேச்சுக்களுக்கு இந்தியா இடைஞ்சலைக் கொடுக்காது.

''எனது கணிப்பின்படி—சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதில் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா உறுதியாக இருக்கிறார்'' என்றும் அவர் கூறினார். (எ-173)

மாவீரர் நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 21

மாவீரர் நாள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டிலான பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 8-30 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்திலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் 1 மணிக்கு வசாவிளான் மகாவித்தியாலயத்திலும் 2-30 மணிக்கு அருணோதயாக் கல்லூரியிலும் நடைபெறும். (க)

மாவீரர் நினைவஞ்சலி கூடம்

யாழ்ப்பாணம், நவ. 21

சுன்னாகம் சந்தியில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவஞ்சலிக் கூடம் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வனால் திறந்துவைக்கப்படும். (க)

பாப்பரசர் விஜயம் ஊர்ஜிதம்

கொழும்பு, நவ. 21

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தை வத்திக்கான் நிர்வாகம், உத்தியோக ரீதியாக உறுதிப்படுத்தியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பரிசுத்த பாப்பரசர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி இலங்கை விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார். (எ)

கிளித்தட்டு

வலிகாமம் தெற்கு, நவ. 21

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிளித்தட்டுப் போட்டிகளின் அரை இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும், இறுதி ஆட்டங்கள் 24 ஆம் திகதியிலும் நடைபெறும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது (க-152)

ஆலயங்களில்

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து வரும் கார்த்திகைத் திங்கட்கிழமைகளில் மாலை 3 மணிக்கு சோமவார பூசை நடைபெறவுள்ளது. (க)

புலிகளின் குரல் வானொலியில்

21—11—1994

திங்கள் இரவு

- ★ 8-01 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி—தமிழீழன் எழுதிய ''உதயத்தமிழீழம் நல்க உயிர் கொடுத்த மாவீரர்''
- ★ 8-20 —புலிகளின் குரல் வானொலியின் 4 ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்—தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்களுடனான செவ்வி
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

22—11—1994

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி—சி. கண்ணம்மா எழுதிய ''சுதந்திரப் போரின் சுவடுகள்''
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

முதலாம் ஆண்டு நீங்காத நினைவினில்

எங்கள் தலைவா! அப்பா!!

அமரர்

சங்கரப்பிள்ளை பீதாம்பரம்

(இளைப்பாறிய உப அதிபர் — யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

அன்னை மடியில்	ஆண்டவன் அடியில்
18 — 04 — 1927	01 — 12 — 1993

திதி: 21-11-1994 (திங்கட்கிழமை)

ஓராண்டு போனதப்பா! உமைப் பிரிந்தே — நாம்
உலகத்தில் நடைப்பிணமாய் ஆகிவிட்டோம் — அப்பா!
சீராகச் சிறப்பாக எமை வளர்த்தீர் — அந்தோ!
செயல் வீரராய்த் திகழ்ந்தெம் வாழ்வில்மேலாம்
ஆராமை மிக்குரிய நிழலை ஈந்தீர் — தலைவா!
அன்புருவாய் அனைவருக்கும் ஆறுதலை ஈந்திர் — அப்பா!
கார் பொழியும் மழைபோலக் கண்ணீர் விட்டுக்
கலங்கியழ வைத்தெம்மை பிரிந்ததேனோ?
பேராளா! உமை எங்கள் உள்ளத்தென்றும்
பெருந் தெய்வ மாய்ப்போற்றி வருவோம் நாமே.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

என்றும் உங்கள் பிரிவால் அல்லலுறும்,
அன்பு மனைவி — சிவயோகம்,
பாச மிகு பிள்ளைகள் — மல்லிகாதேவி,
பத்மராணி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

சிவபதி,
விநாயகர் [illegible]
நல்லூர் [illegible]
யாழ்ப்பாணம்.
[சி/9709]

வீரவணக்கக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் மாவீரர் நாள் வீரவணக்கக் கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் இன்று திங்கட்கிழமை இரவு 7-30மணி முதல் நடைபெறும் இடங்கள் வருமாறு:

கோப்பாய் வட்டத்தில் — ஆவரங்கால் அல்பேட் கலையரங்கம்.

சங்கானை வட்டத்தில் — வழக்கம்பரை அம்மன் கோயில் முன்றில்.

பளை வட்டத்தில் — இத்தாவில் பாடசாலை.

கொடிகாமம் வட்டத்தில்— அல்லாரை அ. த. க. பாடசாலை.

உடுப்பிட்டி வட்டத்தில் — கரணவாய் மகா வித்தியாலயம்.

கரவெட்டி வட்டத்தில் — அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

தீவகக் கோட்டத்தில் நாவற்குழி லவனிதா குடியிருப்பு. (க)

உடன் தேவை

✱ பலகாரவகைகளும்
✱ சுவீட்ஸ் வகைகளும்
தயாரிக்கக் கூடியவர் உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்:
லிங்கம் குளிர் களி நிலையம்
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி)
(33840)

மலிவு விற்பனை!

திருமாட்டி (புடைவைக்கடல்)
(சிமாட்டி)

தரமான புடைவைத் தினுசுகள் கொழும்பு சில்லறை விலையிலும் குறைவாக, மலிவாக இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய டிசைன்களில்

சைனா சித்தை		மீ.	62-50
பிறின்டெட் விஸ்கோஸ்	45''	மீ.	100-00
பிளேன் விஸ்கோஸ்	45''	மீ.	100-00
கலர் பொலியஸ்ரர்	45''	மீ.	60-00
றெஜின் பிளவுஸ் பீஸ் No. 1	36''	மீ.	150-00
மற்றும்			
வேரெக்ஸ் புதிய டிசைன் சித்தை		மீ.	60-00
வேரெக்ஸ் பிறின்டெட் பேபிமல்		மீ.	55-00
வேரெக்ஸ் கலர் பப்ளின்		மீ.	55-00
வேரெக்ஸ் வெள்ளை பப்ளின்		மீ.	50-00
வேரெக்ஸ் பொலியஸ்ரர் சபையர் பிறின்ட்			65 00

ஹறோல்ட் ரீசேட் கொழும்பு காட்சி அறை விலையிலும் விற்பனையாகின்றன!

மற்றும் சூட்டிங், ரகுர், ஒபல், பலஸ், ரிஸ்யூ, செக் துணி வகைகள், வேஞ்சி, பெனியன், யட்டி ஏனைய பட்டு, பருத்தி வகைகளும் மலிவு விலையில் விற்பனையாகின்றன.

மொத்த வியாபாரிகளுக்கு விஷேச கழிவுண்டு.

இன்றே உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.

தலைநகரில்
சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஒரே ஸ்தாபனம்:

திருமாட்டி (புடைவைக்கடல்)
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சி-9629]

மரண அறிவித்தல்

சின்னத்துரை சிவராமலிங்கம்

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சிவசக்தி கோவில் பரிபாலகர் சின்னத்துரை சிவராமலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) 12-11-94 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்

அன்னார் சிவனேசமணியின் (அதிபர்; பூந்தோட்டம் பாடசாலை; வவுனியா) அன்புக் கணவரும், யாமினி (பிராந்திய சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் – வவுனியா), கிரிதரன், ரதாஜினி, பானுதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்; சறோஜினிதேவியின் அன்பு அண்ணாவும்; கனகசபாபதி (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர் – வவுனியா) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியா குடியிருப்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி ஜெகதேவி தர்மலிங்கம்

''மக்கள் கிளினிக்''.
223, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(33850)

திருமதி
கனகம்மா பொன்னுத்துரை
(கொக்குவில்)

முடமாவடியைச் சேர்ந்த திருமதி கனகம்மா பொன்னுத்துரை இன்று அதிகாலை காலமானார்.

இவர் பொன்னுத்துரையின் (யாழ். ஆஸ்பத்திரி முன்னாள் ஊழியர்) அன்பு மனைவியும், சண்முகராஜா, சௌபாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருந்தேவி, சுப்பிரமணியம் ஆகியோரின் மாமியாரும் சித்திராங்கன், சுமித்திரா, சுபத்திரா, விஜித்திரா, ஸ்ரீரங்கன், ரஜனி, ரூபா, நந்தா, பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கொக்குவில் சம்பியன் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. சண்முகராஜா
(மகன்)

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.
(சி/9710)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-11-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.